

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தலைமையில் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (19.07.2023) கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்குவது தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் ஜகநாதன். கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மருத்துவர் நா.சுப்பையன். கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (நுகர்வு) திருமதி. விஜயராணி ஆகியோர் உட்பட கூடுதல் பதிவாளர்கள் உள்ளனர்.


## தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச. காஞ்சிபுரம் மண்டல சங்க நிர்வாகிகள் தேர்தல்

### தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச. காஞ்சிபுரம் மண்டலத்தின் (பதிவு எண் 2148/MDS, பேரவை இணைப்பு எண். 707) கிளைச் சங்கம் மற்றும் தலைமைச் சங்க நிர்வாகிகள் தேர்தலை நடத்திட தொ.மு.ச. பேரவைச் செயலாளர் கோ.சி.வள்ளுவன் அவர்களை தேர்தல் ஆணையாளராக வும், மேலிட பார்வையாளராக வழக்கறிஞர் அ.சரவணன் அவர்களும் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ளனர். தேர்தல் நடைபெறும் தேதி மற்றும் தேர்தல் அட்டவணை போன்ற தேர்தல் நடைமுறைகளைதேர்தல் ஆணையாளர் கோ. சி.வள்ளுவன் அவர்கள் அறிவிப்பார் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**மு.சண்முகம், எம்.பி.**
பொதுச் செயலாளர்,
தொ.மு.ச. பேரவை

## ‘வாட்ஸ்அப்’பில் வந்த செய்தி!




### புற்றுநோய் சிகிச்சைக்காக

# பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து நிவாரணம்!

### டி.ஆர்.பாலு எம்.பி.க்கு பிரதமர் அலுவலகம் கடிதம்!



புதுடெல்லி, ஜூலை 21 - திராவிட முன்னேற்றக் கழகப் பொருளாளரும், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, சென்னை ஆலந்தூர் பகுதியைச் சேர்ந்த திருமதி ரியானா மற்றும் சென்னை சேலையூர் பகுதியைச் சேர்ந்த ஜெயசூரியா ஆகியோரது புற்றுநோய் சிகிச்சைகளுக்காக பிரதமர் தேசிய நிவாரண நிதியி லிருந்து உதவிடுமாறு முறையே 9.6.2023 மற்றும் 13.6.2023 ஆகிய தேதிகளில் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்குத் தனித் தனியே கடிதங்கள் எழுதியிருந்தார்.

டி.ஆர்.பாலு அவர்களின் பரிந்துரையினையும் வேண்டுகோளினையும் ஏற்ற பிரதமர் அவர்கள், திருமதி ரியானா என்பவரின் சிகிச்சைக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், மற்றும் ஜெயசூரியா என்பவரின் சிகிச்சைக்கு 3 லட்ச ரூபாயும் பிரதமர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் அலுவலகம், டி.ஆர். பாலு எம்.பி. அவர்களுக்கு, 3.7.2023 மற்றும் 4.7.2023 தேதியிட்ட கடிதங்களில் தெரிவித்துள்ள விவரம் பின்வருமாறு:

பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து, திருமதி ரியானா அவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையான 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயானது அவர் சிகிச்சை பெறும் சென்னையில் உள்ள அடையாறு புற்றுநோய் மையத்திற்கும் மற்றும் ஜெயசூரியா அவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகையான 3 லட்ச ரூபாயானது, அவர் சிகிச்சை பெறும் வேலூர் கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரி (சி.எம்.சி.) மருத்துவமனைக்கும், வழங்கப்படும் என்றும், சிகிச்சை முடிந்த பின்னர், உரிய ஆவணங்களின் நகலை பிரதமர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும், ஆவணங்கள் கிடைத்த பின்னர், உதவித் தொகையானது உடனடியாக மேற்குறிப்பிட்ட மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், பிரதமர் அலுவலகக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஆக.15க்குள் விண்ணப்பிக்க வேண்டும்!

# உலக சுற்றுலா தினத்தையொட்டி 17 சுற்றுலா விருதுகள்!

### அமைச்சர் கா.ராமச்சந்திரன் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 21 - 2022 ஆம் ஆண்டில் மொத்தம் 4,07,139 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்த நிலையில் 2023 ஆம் ஆண்டில் ஜூன் மாதம் முடிய 6 மாதங்களில் 5,27,072 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளார்கள் என்று சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலா அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்று லாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் (19.07.2023) நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்வேறு சுற்றுலா வளர்ச்சி நடவடிக்கைகள் மற்றும் சுற்றுலா வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து, சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி முன்னிலையில் சுற்றுலாத் துறை அமைச்சர் சுற்றுலா அலுவலர்களிடம் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசுகையில் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முதன்மை சுற்றுலாத் தலமாக முன்னேறி உள்ளது. கொரோனாவிற்கு பிறகு 2021 ஆம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 4,07,139 ஆக உயர்ந்து இந்த ஆண்டு 2023 ல் ஜூன் மாதம் வரை 6 மாத காலத்தில் மட்டும் 5,27,072 ஆக உயர்ந்துள்ளது.

இதே போன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021 ல் 11,53,36,719 ஆக இருந்து 2022 ல் 21,85,84,846 ஆக உயர்ந்து, இந்த ஆண்டு 2023 ல் ஜூன் மாதம் வரை 6 மாத காலத்தில் 14,48,16,003 என உயர்ந்துள்ளது.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி சுற்றுலாவை மேம்படுத்த சுற்றுலா வளர்ச்சிக்கு காரண மாக உள்ள நபர்களை ஊக்குவிக்கும் வகையில்தமிழ்நாடுசுற்றுலாத்துறை 2022 ஆம் ஆண்டு முதல் உலக சுற்றுலா தின நிகழ்ச்சியில் சுற்றுலா விருதுகளை அறிமுகப்படுத்தி வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டிற்கான சிறந்த சுற்றுலா ஏற்பாட்டாளர், சிறந்த உள்நாட்டு சுற்றுலா ஏற்பாட்டாளர், சிறந்த பயண பங்குதாரர், சிறந்த விமான பங்குதாரர், சிறந்த தங்குமிடம், சிறந்த உணவகம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சிறந்த உணவகம், தங்குமிடம் மற்றும் படகு இல்லம், சுற்றுலா ஊக்குவிப்பிற்கான சிறந்த மாவட்டம், சுத்தமான சுற்றுலாத்தலம், பல்வேறு சுற்றுலாப் பிரிவுகளின் சிறந்த ஏற்பாட்டாளர்), சிறந்த சாகச மற்றும் தங்கும் முகாம்கள் சுற்றுலா ஏற்பாட்டாளர், சிறந்த MICE சுற்றுலா அமைப்பாளர், சமூக ஊடகங்களில் அதிக அளவில் தாக்கத்தை ஏற்படுத்துபவர், சிறந்த சுற்றுலா வழிகாட்டி, தமிழ்நாட்டிற்கான சிறந்த சுற்றுலா விளம்பரம், சுற்றுலாவினை பிரபலபடுத்தும் வகையில் சிறப்பாக விளம்பரபடுத்துதல், சுற்றுலா மற்றும் விருந்தோம்பலில் சிறந்த கல்வி நிறுவனம் என 17 பிரிவுகளில் விருதுகள் வழங்கப்பட உள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் www.tntourismawards.com என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்து 15.08.2023க்குள் சமர்ப்பிக்க வேண்டும். அனைத்து மாவட்டங்களிலும் சுற்றுலா செயல்பாட்டாளர்கள் இந்த விருது களுக்கு விண்ணப்பி க்க சுற்றுலா அலுவலர்கள் தங்கள் மாவட்டங்களில் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் அரசு கூடுதல் செயலாளர் வே.முத்தையன், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர் திருமதி. லி.பாரதிதேவி உள்பட சுற்றுலாத் துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக அலுவலர்கள், சுற்றுலா அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாணவர்களை, இளைஞர்களை புத்தொழில் முனைவோர்களாக உருவாக்கும் வகையில்

# அனைத்து திட்டங்களையும் ஒருமுகப்படுத்தி செயல்படுத்த வேண்டும்!

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்!



சென்னை, ஜூலை 21 - குறு, மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று முன்தினம் (19.07.2023) சிட்கோ தலைமையிடத்தில் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII), FaMe-TN, தாய்கோ வங்கி, சேகோசர்வ், இண்ட்கோசர்வ் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து தனித்தனியே ஆய்வுகள் மேற்கொண்டார்.

ஆய்வின் போது, அமைச்சர் அவர்கள் "கடந்த நிதியாண்டு தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மூலம் 152 புதிய கண்டுபிடிப்புகளுக்கு ரூ.3 கோடியே 32 லட்சம் மானியம் வழங்கப்பட்டது. மானியம் வழங்கப்பட்ட புதிய கண்டுபிடிப்புகளை, வர்த்தக ரீதியாக தயாரித்து, சந்தைப்படுத்தும் வகையில், புதிய கண்டுபிடிப்பாளர்களை புதிய தொழில்முனைவோர்களாக உருவாக்க வேண்டும். அவர்களுக்கு தேவையான உதவிகளை TN-Start up நிறுவனம் மற்றும் சுய தொழில் திட்டங்கள் வாயிலாக அவர்களுக்கு தேவையான நிதியுதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்க வேண்டும்.

புதிய தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்தவும் அவர்களுக்கு தேவையான நிதி உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்க புதியதாக தொடங்கப்பட்ட FaMe-TN நிறுவனம் கடந்த நிதியாண்டில் 47 வங்கிகள் மூலம் 13,500 MSME நிறுவனங்களுக்கு ரூ.200 கோடி கடன் உத்திரவாதத்துடன் ரூ.1,930 கோடி கடன் உதவி வழங்கியுள்ளது பாராட்டத்தக்கது. இனி வரும் காலங்களில், அதிக அளவிலான தொழில் முனைவோர்களை உருவாக்க வேண்டும். அதுமட்டும் அல்லாமல், தமிழ்நாடு அரசின் புதிய திட்டமான வர்த்தக வரவுகள் மற்றும் தள்ளுபடி தளம் TN-Treads வாயிலாக ரூ.159 கோடிக்கு MSME நிறுவனங்கள் பயன் அடைந்துள்ளன. இத்தளத்தின் கீழ், இது வரை இணைக்கப்படாத அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களை உடனடியாக இத்தளத்தின் கீழ் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

MSME நிறுவனங்களுக்கு கடன் வழங்கும் நோக்கத்துடன் துவக்கப்பட்ட தாய்கோ வங்கி, அந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் நடப்பாண்டு 3,500 MSME நிறுவனங்களுக்கு ரூ.250 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளது. அந்த இலக்கினை எய்திடவும், வங்கியின் வாராக் கடன்களை விரைந்து வசூலிக்கவும் வேண்டும்.

தேயிலை கூட்டுறவுச் சங்கங்களின் இணையமான இண்ட்கோசர்வ் மூலம் ரூ. 67.74 கோடி மதிப்பில் 15 தேயிலைத் தொழிற்சாலைகள் நவீனமயமாக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை வரும் 3 மாதத்திற்குள் முடித்து தரமான தேயிலை உற்பத்தியினை உறுதி செய்திட வேண்டும். கலப்பட ஜவ்வரிசியை தடுத்திடும் நோக்கிலும், வேதிப்பொருட்கள் கலப்படம் இல்லாத ஜவ்வரிசி மற்றும் அது சார்ந்த உற்பத்திப் பொருட்களுக்கு வர்த்தக முத்திரை பதிவு செய்திட அறிவிக்கப்பட்டது. அதனை உடனடியாக செயல்பாட்டிற்கு கொண்டு வர உரிய அலுவலர்கள் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்" இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ஆய்வில், MSME துறை, அரசு செயலாளர், அருண் ராய், தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவன இயக்குநர், அரசு கூடுதல் தலைமைச் செயலர் உமாசங்கர், தொழில் வணிக ஆணையர் திருமதி.சிஜி தாமஸ், கூடுதல் ஆணையர் திருமதி.கிரேஸ் பச்சோவ், சேகோசர்வ் மேலாண்மை இயக்குநர் லலித் ஆதித்யா நீலம், இண்ட்கோசர்வ் CEO திருமதி. மோனிகா ராணா, தாய்கோ வங்கி, CEO ரவிச்சந்திரன் மற்றும் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.

### ஞான.இமையநாதன் ஏற்பாட்டில்

# மயிலாடுதுறை மத்திய ஒன்றியத்தில் அ.தி.மு.க.வினர் 50 பேர் கழகத்தில் இணைந்தனர்!

### மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., முன்னிலையில்

நாகை. ஜூலை. 21- மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை மத்திய ஒன்றியம் வள்ளலகரம் ஊராட்சியைச் சேர்ந்த அ.தி.மு.க.வினர் தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி பொறையாற்றில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மயிலாடுதுறை மத்திய ஒன்றியச் செயலாளர் ஞான. இமையநாதன் தலைமை தாங்கி நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார். ஒன்றிய பொருளாளர் மோகன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் க.சுரேஷ், ஒன்றிய பிரதிநிதி பாபு ஆகியோர் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் அ.தி.மு.க. ஒன்றிய இலக்கிய அணி அமைப்பாளர் இளங்கோவன் தலைமையில் அக் கட்சியைச் சேர்ந்த 22 குடும்பங்களைச் சேர்ந்த 50 பேர் அக்கட்சியில் இருந்து விலகி மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

கழகத்தில் இணைந்தவர்களுக்கு மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம். முருகன் இருவண்ண கைத்தறி ஆடையை அணிவித்து கழகத்தில் இணைத்து கொண்டார்.

நிகழ்ச்சியில் செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.அப்துல்மாலிக், மாவட்ட பிரதிநிதி ஆர்.கே.சரவணன், கிளை செயலாளர் கோபு, ஒன்றிய பிரதிநிதிகள் சுந்தரதாஸ், திருவடி உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

முடிவில் கிளை செயலாளர் கார்த்திகேயன் நன்றி கூறினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

புழல் து. திருநாவுக்கரசு
ஜூலை 21 (2019)



இளமைக் காலம் முதலே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

புழல் பேரூர்க் கழகத்தில் 13வது வார்டு செயலாளராகவும், பேரூர் மாணவர் அணி அமைப்பாளராகவும், பின்னர் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராகவும், அதன்பின் புழல் பேரூர்க் கழகச் செயலாளராக நான்கு முறையும், சென்னை வடக்கு மாவட்டம் 23வது வட்டச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகச் சொற்பொழிவாளராக பணியாற்றி தமிழகம் முழுவதும் கழகக் கொள்கைகளை பரப்பியவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேலம்

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 1/2023–24/தவஅ/ நாள்: 12.07.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, சேலம்; வட்டம் அவர்களால், **சேலம் மற்றும் எடப்பாடி (நெ) க(ம)ப கோட்டங்களைச்** சார்ந்த 2023–24 சி.ஆர்.ஐ.டி.பி திட்டம் **பதினெட்டு பணிகளுக்கு இணையவழியில் மட்டுமே** சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **09.08.2023 – 15.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள், பெறப்படும் நாள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **24.07.2023** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ / 3796 / ஒப்பந்தப்புள்ளி / 2023

**கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, சேலம் வட்டம்**

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
திருவண்ணாமலை நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒ.அ.எண். 11 / 2023–24 / தவஅ / நாள்: 18.07.2023.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருவண்ணாமலை வட்டம் அவர்களால், **சி.ஆர்.ஐ.டி.பி 2023–24 வேலூர் மற்றும் இராணிப்பேட்டை** (நெ), க(ம)ப, கோட்டங்களைச் சார்ந்த 2 பணிகளுக்கு **இணையவழி மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 10.08.2023 அன்று 12.00மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதரவிபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **22.07.2023** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ./3765/ஒப்பந்தப்புள்ளி/2023

**கண்காணிப்புப்பொறியாளர்(நெ), க(ம)ப, வட்டம், திருவண்ணாமலை**

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்".

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
திருச்சிராப்பள்ளி கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்

ஒப்பந்தப்புள்ளி அழைப்பு
ஒ.அ.எண்.06/2023-24/தவஅ/ நாள் : 18.07.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருச்சிராப்பள்ளி வட்டம், அவர்களால் சி.ஆர்.ஐ.டி.பி. 2023-24 திட்டத்தின் கீழ், திருச்சிராப்பள்ளி (நெ) க(ம)ப கோட்டம் சார்ந்த **1 பணிக்கு இணைய வழியில்** மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **10.08.2023** அன்று 14.00 மணி வரை (இணைய நேரப்படி) வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **24.07.2023** முதல் தெரிந்துக்கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ / 3777 / ஒப்பந்தப்புள்ளி / 2023

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப வட்டம், திருச்சிராப்பள்ளி – 20**

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
திருச்சிராப்பள்ளி கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்

ஒப்பந்தப்புள்ளி அழைப்பு
ஒ.அ.எண்.05/2023-24/தவஅ/ நாள் : 17.07.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருச்சிராப்பள்ளி வட்டம், அவர்களால் சி.ஆர்.ஐ.டி.பி. 2023-24 திட்டத்தின் கீழ், திருச்சிராப்பள்ளி (நெ) க(ம)ப கோட்டம் சார்ந்த **1 பணிக்கு இணைய வழியில்** மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **10.08.2023** அன்று 14.00 மணி வரை (இணைய நேரப்படி) வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **24.07.2023** முதல் தெரிந்துக்கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ / 3776 / ஒப்பந்தப்புள்ளி / 2023

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப வட்டம், திருச்சிராப்பள்ளி – 20**

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், சேலம்

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 6/2023–24/தவஅ/ நாள்: 18.07.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும் **கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, சேலம் வட்டம்** அவர்களால், **சேலம் மற்றும் எடப்பாடி (நெ) க(ம)ப கோட்டங்களை சார்ந்த 2023–24 திட்டம் சாரா நான்கு பணிகளுக்கு இணையவழியில் மட்டுமே** சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **09.08.2023 – 15.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள், பெறப்படும் நாள் மற்றும் அனைத்து இதர விவரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **24.07.2023** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, சேலம் வட்டம்**

செ.ம.தொ.இ./3803/ஒப்பந்தப்புள்ளி/2023

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."